$$b=\frac{\Delta_b}{\Delta}=\frac{12}{24}=\frac{1}{2}\Rightarrow y=2$$

$$c=\frac{\Delta_c}{\Delta}=\frac{24}{24}=1\Rightarrow z=1$$

$$\therefore \text{ தீர்வு } (x,y,z) = (1,2,1)$$

செய்து பார்க்க:

அணிக்கோவை அணி காணல் முறையில் தீர்க்க:

- ❖ $x+2y+z=7, 2x-y+2z=4, x+y-2z=-1$

  (Hint: $\Delta=14, \Delta_x=15, \Delta_y=30, \Delta_z=30$)
- ❖ $2x+y+z=5\,; x+y+z=4\,; x-y+2z=1$

  (Hint: $\Delta=3, \Delta_x=3, \Delta_y=6, \Delta_z=3$)
- ❖ $x+y+z=4, x-y+z=2; 2x+y-z=1$

  (Hint: $\Delta=6, \Delta_x=6, \Delta_y=6, \Delta_z=12$)
- ❖ $3x+y-z=2; 2x-y+2z=6; 2x+y-2z=-2$

  (Hint: $\Delta=4, \Delta_x=4, \Delta_y=8, \Delta_z=12$)

$$\Delta_z = \begin{vmatrix} 2 & -1 & 2 \\ 6 & -3 & 6 \\ 4 & -2 & 4 \end{vmatrix} = 0 \because R_1, R_2 \text{ விகித சமம்}$$

$\Delta = 0$ மற்றும் $\Delta_x = \Delta_y = \Delta_z = 0$ மேலும் Δ, $\Delta_x, \Delta_y, \Delta_z$-இன் எல்லா 2×2 சிற்றணிக் கோவை மதிப்புகளும் பூச்சியங்கள் ஆனால் Δ ல் குறைந்தது ஒரு
உறுப்பாவது பூச்சியமற்றதாதலால் எண்ணிக்கையற்ற தீர்வுகள் இருக்கும். மேற்கண்ட சமன்பாட்டுத் தொகுப்பு ஒரு சமன்பாட்டுக்கு குறையும்.

கொடுக்கப்பட்ட தொகுப்பானது $2x - y + z = 2$ ஆகும்.

$y = s, z = t, s, t \in R$ என்க.

$$2x - s + t = 2 \Rightarrow 2x = 2 + s - t \Rightarrow x = \frac{2 + s - t}{2}$$

$$\therefore \text{ தீர்வானது } (x, y, z) = \left(\frac{2 + s - t}{2}, s, t\right), s, t \in R$$

செய்து பார்க்க:

அணிக்கோவை அணி காணல் முறையில் தீர்க்க:

- $x + y + 2z = 4, 2x + 2y + 4z = 8, 3x + 3y + 6z = 12$
- $x + 2y + 3z = 6$; $2x + 4y + 6z = 12$; $3x + 6y + 9z = 18$

5. தர முறையில் தரப்பட்ட சமன்பாட்டுத் தொகுப்பு ஒருங்கமைந்ததா என சரிபார்த்து. அவ்வாறு ஒருங்கமைந்ததாயின் அதனைத் தீர்க்க :

$4x + 3y + 6z = 25, x + 5y + 7z = 13, 2x + 9y + z = 1$

தீர்வு :

தரப்பட்ட சமன்பாடுகளின் அணி அமைப்பு

$$\begin{bmatrix} 4 & 3 & 6 \\ 1 & 5 & 7 \\ 2 & 9 & 1 \end{bmatrix} \begin{bmatrix} x \\ y \\ z \end{bmatrix} = \begin{bmatrix} 25 \\ 13 \\ 1 \end{bmatrix}$$

$$AX = B$$

$$[AB] = \begin{bmatrix} 4 & 3 & 6 & 25 \\ 1 & 5 & 7 & 13 \\ 2 & 9 & 1 & 1 \end{bmatrix}$$

$$\sim \begin{bmatrix} 1 & 5 & 7 & 13 \\ 4 & 3 & 6 & 25 \\ 2 & 9 & 1 & 1 \end{bmatrix} \quad R_1 \leftrightarrow R_2$$

$$\sim \begin{bmatrix} 1 & 5 & 7 & 13 \\ 0 & -17 & -22 & -27 \\ 0 & -1 & -13 & -25 \end{bmatrix} \quad \begin{matrix} R_2 \to R_2 - 4R_1 \\ R_3 \to R_3 - 2R_1 \end{matrix}$$

$$\sim \begin{bmatrix} 1 & 5 & 7 & 13 \\ 0 & -17 & -22 & -27 \\ 0 & 0 & -199 & -398 \end{bmatrix} \quad R_3 \to 17R_3 - R_2$$

கடைசி சமான அணியானது ஏறுபடி வடிவில் உள்ளது, அது மூன்று பூச்சியமற்ற நிரைகளைப் பெற்றுள்ளதால். $\rho\,[A, B] = 3$ ஆகும்.

$$\text{மேலும்} A \sim \begin{bmatrix} 1 & 5 & 7 \\ 0 & -17 & -22 \\ 0 & 0 & -199 \end{bmatrix}$$

இதில் மூன்று பூச்சியமற்ற நிரைகள் இருப்பதால்,

$$\rho\,(A) = 3$$

$\rho\,(A) = \rho\,[A, B] = 3 =$ மதிப்பிட வேண்டிய மாறிகளின் எண்ணிக்கை. எனவே, இது ஒருங்கமைச் சமன்பாட்டுத் தொகுப்பாகும். மேலும் இதற்கு ஒரே ஒரு தீர்வுதான் காண முடியும்.

$$\begin{bmatrix} 1 & 5 & 7 \\ 0 & -17 & -22 \\ 0 & 0 & -199 \end{bmatrix} \begin{bmatrix} x \\ y \\ z \end{bmatrix} = \begin{bmatrix} 13 \\ -27 \\ -398 \end{bmatrix}$$

$$x + 5y + 7z = 13$$

$$-17y - 22\,z = -27$$

$$-199z = -398 \Rightarrow \boxed{z = 2}$$

$$-17y - 22(2) = -27 \Rightarrow -17y = -27 + 44 = 17$$

$$\Rightarrow \boxed{y = -1}$$

$$x + 5(-1) + 7(2) = 13 \Rightarrow x = 13 + 5 - 14 = 4$$

$$\boldsymbol{x = 4, y = -1, z = 2}$$

செய்து பார்க்க:

தர முறையில் தரப்பட்ட சமன்பாட்டுத் தொகுப்பு ஒருங்கமைந்ததா என சரிபார்த்து. அவ்வாறு ஒருங்கமைந்ததாயின் அதனைத் தீர்க்க :

$2x + 5y + 7z = 52, x + y + z = 9, 2x + y - z = 0$

6. தர முறையில் தரப்பட்ட சமன்பாட்டுத் தொகுப்பு ஒருங்கமைந்ததா என சரிபார்த்து. அவ்வாறு ஒருங்கமைந்ததாயின் அதனைத் தீர்க்க :

$x - 3y - 8z = -10; 3x + y - 4z = 0;$
$2x + 5y + 6z - 13 = 0$

தீர்வு :

தரப்பட்ட சமன்பாடுகளின் அணி அமைப்பு

$$\begin{bmatrix} 1 & -3 & -8 \\ 3 & 1 & -4 \\ 2 & 5 & 6 \end{bmatrix} \begin{bmatrix} x \\ y \\ z \end{bmatrix} = \begin{bmatrix} -10 \\ 0 \\ 13 \end{bmatrix}$$

$$AX = B$$

$$[AB] = \begin{bmatrix} 1 & -3 & -8 & -10 \\ 3 & 1 & -4 & 0 \\ 2 & 5 & 6 & 13 \end{bmatrix}$$

$$\sim \begin{bmatrix} 1 & -3 & -8 & -10 \\ 0 & 10 & 20 & 30 \\ 0 & 11 & 22 & 33 \end{bmatrix} \quad \begin{matrix} R_2 \to R_2 - 3R_1 \\ R_3 \to R_3 - 2R_1 \end{matrix}$$

$$\sim \begin{bmatrix} 1 & -3 & -8 & -10 \\ 0 & 1 & 2 & 3 \\ 0 & 1 & 2 & 3 \end{bmatrix} \quad \begin{matrix} R_2 \to \frac{1}{10} R_2 \\ R_3 \to \frac{1}{11} R_3 \end{matrix}$$

$$\sim \begin{bmatrix} 1 & -3 & -8 & -10 \\ 0 & 1 & 2 & 3 \\ 0 & 0 & 0 & 0 \end{bmatrix} \quad R_3 \to R_3 - R_2$$

கடைசி சமான அணியில் இரண்டு பூச்சியமற்ற நிரைகள் உள்ளதால், $\rho\,[A, B] = 2$ ஆகும்.

$$\text{மேலும் } A \sim \begin{bmatrix} 1 & -3 & -8 \\ 0 & 1 & 2 \\ 0 & 0 & 0 \end{bmatrix}$$

இதில் இரண்டு பூச்சியமற்ற நிரைகள் உள்ளதால், $\rho\,(A) = 2$.

$\rho\,(A) = \rho\,[A, B] = 2 <$ மதிப்பிட வேண்டிய மாறிகளின் எண்ணிக்கை. எனவே, தரப்பட்ட தொகுப்பிற்கு எண்ணிக்கையற்ற தீர்வுகள் இருக்கும்.

இது ஒருங்கமைச் சமன்பாட்டுத் தொகுப்பாகும்.

தரப்பட்ட சமன்பாட்டுத் தொகுப்பானது. பின்வரும் அணிச்சமன்பாட்டுக்குச் சமானமானதாகும்.

$$\begin{bmatrix}1 & -3 & -8\\0 & 1 & 2\\0 & 0 & 0\end{bmatrix}\begin{bmatrix}x\\y\\z\end{bmatrix}=\begin{bmatrix}-10\\3\\0\end{bmatrix}$$

$x-3y-8z=-10 \cdots\cdots (1)$

$y+2z=3 \cdots\cdots\cdots\cdots\cdots\cdots (2)$

$z=k\in R$ என்க.

$(1)\Rightarrow y=3-2z=3-2k$

$(2)\Rightarrow x=-10+3y+8z=-10+3(3-2k)+8k$
$=-1+2k$

தீர்வானது $\boldsymbol{x=2k-1, y=3-2k, z=k, k\in R}$

செய்து பார்க்க:

தர முறையில் தரப்பட்ட சமன்பாட்டுத் தொகுப்பு ஒருங்கமைந்ததா என சரிபார்த்து. அவ்வாறு ஒருங்கமைந்ததாயின் அதனைத் தீர்க்க :

$x+y+z=6, x+2y+3z=14, x+4y+7z=30$

7. தர முறையில் தரப்பட்ட சமன்பாட்டுத் தொகுப்பு ஒருங்கமைந்ததா என சரிபார்த்து. அவ்வாறு ஒருங்கமைந்ததாயின் அதனைத் தீர்க்க :
$\boldsymbol{x+y-z=1;\ 2x+2y-2z=2;}$
$\boldsymbol{-3x-3y+3z=-3}$

தீர்வு :

தரப்பட்ட சமன்பாடுகளின் அணி அமைப்பு

$$\begin{bmatrix}1 & 1 & -1\\2 & 2 & -2\\-3 & -3 & 3\end{bmatrix}\begin{bmatrix}x\\y\\z\end{bmatrix}=\begin{bmatrix}1\\2\\-3\end{bmatrix}$$

$AX=B$

$$[AB]=\begin{bmatrix}1 & 1 & -1 & 1\\2 & 2 & -2 & 2\\-3 & -3 & 3 & -3\end{bmatrix}$$

$$\sim\begin{bmatrix}1 & 1 & -1 & 1\\0 & 0 & 0 & 0\\0 & 0 & 0 & 0\end{bmatrix}\begin{matrix}\\R_2\longrightarrow R_2-2R_1\\R_3\longrightarrow R_3+3R_1\end{matrix}$$

கடைசி சமான அணியில் ஒரே ஒரு பூச்சியமற்ற நிரைதான் உள்ளது. $\rho[A,B]=1$ ஆகும்.

மேலும் $A\sim\begin{bmatrix}1 & 1 & -1\\0 & 0 & 0\\0 & 0 & 0\end{bmatrix}$.

இதில் ஒரே ஒரு பூச்சியமற்ற நிரைகள் உள்ளதால்,

$\rho(A)=1$

$\rho(A)=\rho[A,B]=1<$ மதிப்பிட வேண்டிய மாறிகளின் எண்ணிக்கை. எனவே, தரப்பட்ட தொகுப்பிற்கு எண்ணிக்கையற்ற தீர்வுகள் இருக்கும். இது ஒருங்கமைச் சமன்பாட்டுத் தொகுப்பாகும். தரப்பட்ட சமன்பாட்டுத் தொகுப்பானது. பின்வரும் அணிச்சமன்பாட்டுக்குச் சமானமானதாகும்.

$$\begin{bmatrix}1 & 1 & -1\\0 & 0 & 0\\0 & 0 & 0\end{bmatrix}\begin{bmatrix}x\\y\\z\end{bmatrix}=\begin{bmatrix}1\\0\\0\end{bmatrix}$$

$x+y-z=1 \cdots\cdots (1)$

$y=k_1, z=k_2, k_1,k_2\in R$ என்க.

$(1)\Rightarrow x=1-y+z=1-k_1+k_2$

தீர்வானது

$\boxed{\boldsymbol{x=1-k_1+k_2, y=k_1, z=k_2, k_1,k_2\in R}}$

செய்து பார்க்க:

தர முறையில் தரப்பட்ட சமன்பாட்டுத் தொகுப்பு ஒருங்கமைந்ததா என சரிபார்த்து. அவ்வாறு ஒருங்கமைந்ததாயின் அதனைத் தீர்க்க :

$x-y+z=5, -x+y-z=-5, 2x-2y+2z=10$

8. பின்வரும் சமன்பாடுகளின் ஒருங்கமைவுத் தன்மையை ஆராய்க.
$\boldsymbol{2x-3y+7z=5, 3x+y-3z=13, 2x+19y-47z=32}$

தீர்வு :

தரப்பட்ட சமன்பாடுகளின் அணி அமைப்பு

$$\begin{bmatrix}2 & -3 & 7\\3 & 1 & -3\\2 & 19 & -47\end{bmatrix}\begin{bmatrix}x\\y\\z\end{bmatrix}=\begin{bmatrix}5\\13\\32\end{bmatrix}$$

$AX=B$

$$[AB]=\begin{bmatrix}2 & -3 & 7 & 5\\3 & 1 & -3 & 13\\2 & 19 & -47 & 32\end{bmatrix}$$

$$\sim\begin{bmatrix}1 & -\frac{3}{2} & \frac{7}{2} & \frac{5}{2}\\3 & 1 & -3 & 13\\2 & 19 & -47 & 32\end{bmatrix}\ R_1\to\frac{1}{2}R1$$

$$\sim\begin{bmatrix}1 & -\frac{3}{2} & \frac{7}{2} & \frac{5}{2}\\0 & \frac{11}{2} & -\frac{27}{2} & \frac{11}{2}\\0 & 22 & -54 & 27\end{bmatrix}\begin{matrix}\\R_2\to R_2-3R_1\\R_3\to R_3-2R_1\end{matrix}$$

$$\sim\begin{bmatrix}1 & -\frac{3}{2} & \frac{7}{2} & \frac{5}{2}\\0 & \frac{11}{2} & -\frac{27}{2} & \frac{11}{2}\\0 & 0 & 0 & 5\end{bmatrix}\ R_3\to R_3-4R_2$$

கடைசி சமான அணியானது ஏறுபடி வடிவில் உள்ளது, அது மூன்று பூச்சியமற்ற நிரைகளைப் பெற்றுள்ளதால். $\rho[A,B]=3$ ஆகும். மேலும்

$$A\sim\begin{bmatrix}1 & -\frac{3}{2} & \frac{7}{2}\\0 & \frac{11}{2} & -\frac{27}{2}\\0 & 0 & 0\end{bmatrix}$$

இதில் இரண்டு பூச்சியமற்ற நிரைகள் உள்ளதால்,

$\rho(A)=2$

$\rho(A)\neq\rho[A,B]$

எனவே, தரப்பட்ட சமன்பாட்டுத் தொகுப்பு ஒருங்கமைவு இல்லாதது என்பதால் தீர்வு காண முடியாது.

9. λ-இன் எல்லா மதிப்புகளுக்கும் பின்வரும் சமன்பாட்டுத் தொகுப்பின் தீர்வுகளை ஆராய்க.
$\boldsymbol{x+y+z=2, 2x+y-2z=2,}$

$$\boldsymbol{\lambda x + y + 4z = 2}$$

தீர்வு :

தரப்பட்ட சமன்பாடுகளின் அணி அமைப்பு

$$\begin{bmatrix} 1 & 1 & 1 \\ 2 & 1 & -2 \\ \lambda & 1 & 4 \end{bmatrix}\begin{bmatrix} x \\ y \\ z \end{bmatrix} = \begin{bmatrix} 2 \\ 2 \\ 2 \end{bmatrix}$$

$$AX = B$$

$$[AB] = \begin{bmatrix} 1 & 1 & 1 & 2 \\ 2 & 1 & -2 & 2 \\ \lambda & 1 & 4 & 2 \end{bmatrix}$$

$$\sim \begin{bmatrix} 1 & 1 & 1 & 2 \\ 0 & -1 & -4 & -2 \\ 0 & 1-\lambda & 4-\lambda & 2-2\lambda \end{bmatrix} \begin{matrix} R_2 \to R_2 - 2R_1 \\ R_3 \to R_3 - \lambda R_1 \end{matrix}$$

$$\sim \begin{bmatrix} 1 & 1 & 1 & 2 \\ 0 & -1 & -4 & -2 \\ 0 & -\lambda & -\lambda & -2\lambda \end{bmatrix} R_3 \to R_3 + R_2$$

$$\sim \begin{bmatrix} 1 & 1 & 1 & 2 \\ 0 & -1 & -4 & -2 \\ 0 & 0 & 3\lambda & 0 \end{bmatrix} R_3 \to R_3 - \lambda R_2$$

நிலை (i) : $\lambda = 0 \Rightarrow \rho(A) = 2; \rho[A,B] = 2$

$\rho(A) = \rho[A,B] = 2 < 3$ (மதிப்பிட வேண்டிய மாறிகளின் எண்ணிக்கை.)

∴ தரப்பட்ட சமன்பாட்டுத் தொகுப்பு ஒருங்கமைவு உள்ளது. ஆனால் எண்ணிக்கையற்ற தீர்வுகளைப் பெற்றிருக்கும்.

நிலை (ii) : $\lambda \neq 0 \Rightarrow \rho(A) = 3; \rho[A,B] = 3$

$\rho(A) = \rho[A,B] = 3$ (=மதிப்பிட வேண்டிய மாறிகளின் எண்ணிக்கை.)

∴தரப்பட்ட தொகுப்பு ஒருங்கமைவு உள்ளது. எனவே ஒரே ஒரு தீர்வினை பெற்றிருக்கும்.

10. k-இன் எம்மதிப்புகளுக்கு பின்வரும் சமன்பாட்டுத் தொகுப்பு $kx + y + z = 1, x + ky + z = 1, x + y + kz = 1$ (i) ஒரே ஒரு தீர்வு (ii) ஒன்றுக்கு மேற்பட்ட தீர்வு (iii) தீர்வு இல்லாமை பெறும் .

தீர்வு :

தரப்பட்ட சமன்பாடுகளின் அணி அமைப்பு

$$\begin{bmatrix} k & 1 & 1 \\ 1 & k & 1 \\ 1 & 1 & k \end{bmatrix}\begin{bmatrix} x \\ y \\ z \end{bmatrix} = \begin{bmatrix} 1 \\ 1 \\ 1 \end{bmatrix}$$

$$AX = B$$

$$[AB] = \begin{bmatrix} k & 1 & 1 & 1 \\ 1 & k & 1 & 1 \\ 1 & 1 & k & 1 \end{bmatrix}$$

$$\sim \begin{bmatrix} 1 & 1 & k & 1 \\ 1 & k & 1 & 1 \\ k & 1 & 1 & 1 \end{bmatrix} R_1 \leftrightarrow R_3$$

$$\sim \begin{bmatrix} 1 & 1 & k & 1 \\ 0 & k-1 & 1-k & 0 \\ 0 & 1-k & 1-k^2 & 1-k \end{bmatrix} \begin{matrix} R_2 \to R_2 - R_1 \\ R_3 \to R_3 - kR_1 \end{matrix}$$

$$\sim \begin{bmatrix} 1 & 1 & k & 1 \\ 0 & k-1 & 1-k & 0 \\ 0 & 0 & 2-k-k^2 & 1-k \end{bmatrix} R_3 \to R_3 + R_2$$

$$\sim \begin{bmatrix} 1 & 1 & k & 1 \\ 0 & k-1 & 1-k & 0 \\ 0 & 0 & (2+k)(1-k) & 1-k \end{bmatrix}$$

நிலை (i) : $k = 1 \Rightarrow \rho(A) = 1; \rho[A,B] = 1$

$\rho(A) = \rho[A,B] = 1 < 3$ (மதிப்பிட வேண்டிய மாறிகளின் எண்ணிக்கை.)

∴ தரப்பட்ட சமன்பாட்டுத் தொகுப்பு ஒருங்கமைவு உள்ளது. ஆனால் எண்ணிக்கையற்ற தீர்வுகளைப் பெற்றிருக்கும்.

நிலை (ii) : $k = -2 \Rightarrow \rho(A) = 2; \rho[A,B] = 3$

$$\rho(A) \neq \rho[A,B]$$

எனவே தரப்பட்ட தொகுப்பு ஒருங்கமைவு இல்லாதது, எனவே தீர்வு கிடைக்காது.

நிலை (iii) : $k \neq -2$ மற்றும் $k \neq 1$

$$\Rightarrow \rho(A) = 3; \rho[A,B] = 3$$

$\rho(A) = \rho[A,B] = 3$ (=மதிப்பிட வேண்டிய மாறிகளின் எண்ணிக்கை.)

∴தரப்பட்ட தொகுப்பு ஒருங்கமைவு உள்ளது. எனவே ஒரே ஒரு தீர்வினை பெற்றிருக்கும்.

செய்து பார்க்க:

- **எடுத்துக்காட்டு 1.26 :** λ, μ-இன் எம்மதிப்புகளுக்கு $x + y + z = 6, x + 2y + 3z = 10, x + 2y + \lambda z = \mu$ என்ற சமன்பாடுகள் (i) யாதொரு தீர்வும் பெற்றிராது (ii) ஒரே ஒரு தீர்வை பெற்றிருக்கும் (iii) எண்ணிக்கையற்ற தீர்வுகளைப் பெற்றிருக்கும் என்பதனை ஆராய்க.
- **எடுத்துக்காட்டு 1.28 :** μ -இன் எம்மதிப்பிற்கு $x + y + 3z = 0, 4x + 3y + \mu z = 0, 2x + y + 2z = 0$ என்ற தொகுப்பிற்கு (i) வெளிப்படைத் தீர்வு (ii) வெளிப்படையற்ற தீர்வு கிடைக்கும்.
- **பயிற்சி 1.1 ல் 3, 6, 7, 9**
- **எடுத்துக்காட்டுகள்: 1.14, 1.21, 1.27**

வெக்டர் இயற்கணிதம்

பிரிவு –அ வினா விடைகள்

(வினா எண்	வினா	விடை
1	$x^2+y^2+z^2-6x+8y-10z+1=0$ என்ற கோளத்தின் மையம் மற்றும் ஆரம்	$(3,-4,5),7$
2	$\vec{r}=(-\vec{i}+2\vec{j}+3\vec{k})+t(-2\vec{i}+\vec{j}+\vec{k})$ மற்றும் $\vec{r}=(2\vec{i}+3\vec{j}+5\vec{k})+s(\vec{i}+2\vec{j}+3\vec{k})$ என்ற கோடுகள் வெட்டிக் கொள்ளும் புள்ளி	$(1,1,2)$
3	$\vec{u}=\vec{a}\times(\vec{b}\times\vec{c})+\vec{b}\times(\vec{c}\times\vec{a})+\vec{c}\times(\vec{a}\times\vec{b})$, எனில்	$\vec{u}=\vec{0}$
4	$\frac{x-3}{1}=\frac{y+3}{5}=\frac{2z-5}{3}$ க்கு இணையாகவும் $(1,3,5)$ புள்ளி வழியாகவும் செல்லக்கூடிய கோட்டின்வெக்டர் சமன்பாடு	$\vec{r}=(\vec{i}+3\vec{j}+5\vec{k})+t\left(\vec{i}+5\vec{j}+\frac{3}{2}\vec{k}\right)$
5	$\vec{a}+\vec{b}+\vec{c}=\vec{0}, \lvert\vec{a}\rvert=3, \lvert\vec{b}\rvert=4, \lvert\vec{c}\rvert=5$, எனில்$\vec{a}$ க்கும் $\vec{b}$ க்கும் இடைப்பட்ட கோணம்	$\frac{\pi}{2}$
6	$(2,1,-1)$ என்ற புள்ளி வழியாகவும் தளங்கள $\vec{r}\cdot(\vec{i}+3\vec{j}-\vec{k})=0$; $\vec{r}\cdot(\vec{j}+2\vec{k})=0$ வெட்டிக் கொள்ளும் கோட்டை உள்ளடக்கியதுமான தளத்தின் சமன்பாடு	$x+9y+11z=0$
7	$\vec{a},\vec{b},\vec{c}$ என்பன a,b,c ஆகியவற்றை மட்டுக்களாகக் கொண்டு வலக்கை அமைப்பில் ஒன்றுக்கொன்று செங்குத்தான வெக்டர்கள் எனில் $[\vec{a}, \vec{b}, \vec{c}]$ இன் மதிப்பு	abc
8	$\frac{x-3}{4}=\frac{y-1}{2}=\frac{z-5}{-3}$ மற்றும் $\frac{x-1}{4}=\frac{y-2}{2}=\frac{z-3}{-3}$ என்ற இணை கோடுகளுக்கிடையே உள்ள மிக குறைந்த தொலைவு	3
9	$\vec{a}$ ஒரு பூச்சியமற்ற வெக்டராகவும் m ஒரு பூச்சியமற்ற திசையிலியாகவும் இருப்பின் $m\vec{a}$ ஆனது ஓரலகு வெக்டர் எனில்,	$a=\frac{1}{\lvert m\rvert}$
10	$3\vec{i}+\vec{j}-\vec{k}$ என்ற வெக்டரை ஒரு மூலை விட்டமாகவும் $\vec{i}-3\vec{j}+4\vec{k}$ ஐ ஒரு பக்கமாகவும் கொண்ட இணைகரத்தின் பரப்பு	$3\sqrt{30}$
11	$\frac{x-6}{-6}=\frac{y+4}{4}=\frac{z-4}{-8}$ மற்றும் $\frac{x+1}{2}=\frac{y+2}{4}=\frac{z+3}{-2}$ என்ற கோடுகள் வெட்டிக் கொள்ளும் புள்ளி	$(0,0,-4)$
12	$[\vec{i}+\vec{j}, \vec{j}+\vec{k}, \vec{k}+\vec{i}]$ இன் மதிப்பு	2
13	$(2,10,1)$ என்ற புள்ளிக்கும $\vec{r}\cdot(3\vec{i}-\vec{j}+4\vec{k})=2\sqrt{26}$ என்ற தளத்திற்கும் இடைப்பட்ட மிகக் குறைந்த தூரம்	2
14	$\vec{a}\times(\vec{b}\times\vec{c})+\vec{b}\times(\vec{c}\times\vec{a})+\vec{c}\times(\vec{a}\times\vec{b})=\vec{x}\times\vec{y}$, எனில்	$\vec{x}=\vec{0}$ அல்லது $\vec{y}=\vec{0}$ அல்லது $\vec{x}$–ம் $\vec{y}$ ம் இணையாகும்
15	$\frac{x-1}{2}=\frac{y-2}{3}=\frac{z-3}{4}$ மற்றும் $\frac{x-2}{3}=\frac{y-4}{3}=\frac{z-5}{5}$ என்ற கோடுகளுக்கிடையே உள்ள மிகக் குறைந்த தொலைவு	$\frac{1}{\sqrt{6}}$

(வினா எண்	வினா	விடை
16	$\vec{a}$ மற்றும் $\vec{b}$ இரண்டு ஒரலகு வெக்டர் மற்றும் θ என்பது அவற்றிற்கு இடைப்பட்ட கோணம் $\vec{a}+\vec{b}$ ஆனது ஒரலகு வெக்டராயின்	$\theta = \frac{2\pi}{3}$
17	$2\vec{i}+3\vec{j}+4\vec{k}$, $a\vec{i}+b\vec{j}+c\vec{k}$ ஆகிய வெக்டர்கள் செங்குத்து வெக்டர்களாயின	$a = 4,\quad b = 4,\quad c = -5$
18	$\vec{r} = s\vec{i}+t\vec{j}$ என்ற சமன்பாடு குறிப்பது	xoy தளம்
19	$\vec{p},\vec{q}$ மற்றும் $\vec{p}+\vec{q}$ ஆகியவை எண்ணளவு λ கொண்ட வெக்டர்களாயின் $\lvert\vec{p}-\vec{q}\rvert$ ஆனது	$\sqrt{3}\,\lambda$
20	$\overrightarrow{PR} = 2\vec{i}+\vec{j}+\vec{k}$ $\overrightarrow{QS} = -\vec{i}+3\vec{j}+2\vec{k}$ எனில், நாற்கரம் $PQRS$ இன் பரப்பு	$\frac{5\sqrt{3}}{2}$
21	$\frac{x-1}{2} = \frac{y-1}{-1} = \frac{z}{1}$ மற்றும் $\frac{x-2}{3} = \frac{y-1}{-5} = \frac{z-1}{2}$ ஆகிய இருகோடுகளும்	ஒரு தளம் அமையாதவை
22	$[\vec{a}+\vec{b},\ \vec{b}+\vec{c},\ \vec{c}+\vec{a}] = 8$ எனில் $[\vec{a},\ \vec{b},\ \vec{c}]$ இன் மதிப்பு	4
23	$\vec{i}+a\vec{j}-\vec{k}$ எனும் விசை $\vec{i}+\vec{j}$ எனும் புள்ளிவழியேச் செயல்படுகிறது $\vec{j}+\vec{k}$ எனும் புள்ளியைப் பொறுத்து அதன் திருப்புத் திறனின் அளவு $\sqrt{8}$ எனில் a இன் மதிப்பு	2
24	$\vec{a},\vec{b},\vec{c}$ என்பன ஒரு தளம் அமையா வெக்டர்கள் மேலும் $[\vec{a}\times\vec{b},\vec{b}\times\vec{c},\ \vec{c}\times\vec{a}] = [\vec{a}+\vec{b},\ \vec{b}+\vec{c},\ \vec{c}+\vec{a}]$ எனில் $[\vec{a},\ \vec{b},\ \vec{c}]$ இன் மதிப்பு	2
25	ஒரு கோடு x மற்றும் y அச்சுகளுடன் மிகை திசையில் $45^0, 60^0$ கோணங்களை ஏற்படுத்துகிறது எனில் z அச்சுடன் அது உண்டாக்கும் கோணம்	60^0
26	$\vec{r} = (\vec{i}-\vec{k}) + t(3\vec{i}+2\vec{j}+7\vec{k})$ என்ற கோடும் $\vec{r}\cdot(\vec{i}+\vec{j}-\vec{k}) = 8$ என்ற தளமும் வெட்டிக்கொள்ளும் புள்ளி	$(-8,-6,-22)$
27	$[\vec{a}\times\vec{b},\vec{b}\times\vec{c},\vec{c}\times\vec{a}] = 64$ எனில் $[\vec{a},\ \vec{b},\ \vec{c}]$ இன் மதிப்பு	8
28	$(\vec{a}\times\vec{b})\times(\vec{c}\times\vec{d})$ என்பது	$\vec{a},\ \vec{b}$ ஐ கொண்ட தளமும் $\vec{c},\ \vec{d}$ ஐ கொண்ட தளமும் வெட்டிக் கொள்ளும் கோட்டிற்கு இணை
29	$\vec{F} = \vec{i}+\vec{j}+\vec{k}$ என்ற விசை ஒரு துகளை $A(3,3,3)$ எனும் நிலையிலிருந்து $B(4,4,4)$எனும் நிலைக்கு நகர்த்தினால் அவ்விசை செய்யும் வேலையளவு	3 அலகுகள்
30	$\vec{a} = \vec{i}-2\vec{j}+3\vec{k}$ மற்றும் $\vec{b} = 3\vec{i}+\vec{j}+2\vec{k}$ எனில் $\vec{a}$ க்கும் $\vec{b}$ க்கும் செங்குத்தாக உள்ள ஒரு ஒரலகு வெக்டர்	$\frac{\vec{i}-\vec{j}-\vec{k}}{\sqrt{3}}$
31	$\vec{a}$ க்கும் $\vec{b}$ க்கும் இடைப்பட்ட கோணம் 120^0 மேலும் அவற்றின் எண்ணளவுகள் முறையே 2 , $\sqrt{3}$ எனில் $\vec{a}\cdot\vec{b}$ ஆனது	$-\sqrt{3}$
32	$\vec{b}$ இன் மீது $\vec{a}$ இன் வீழல் மற்றும் $\vec{a}$ இன்மீது $\vec{b}$ இன் வீழலும் சமமாயின் $\vec{a}+\vec{b}$ மற்றும் $\vec{a}-\vec{b}$ க்கு இடைப்பட்ட கோணம்	$\frac{\pi}{2}$

(வினா எண்	வினா	விடை
33	$\vec{a}, \vec{b}, \vec{c}$ என்ற ஒரு தளமற்ற வெக்டர்களுக்கு $\vec{a} \times (\vec{b} \times \vec{c}) = (\vec{a} \times \vec{b}) \times \vec{c}$ எனில்	$\vec{c}$ ஆனது $\vec{a}$ –க்கு இணை
34	$\overrightarrow{OQ}$ என்ற அலகு வெக்டர் மீதான $\overrightarrow{OP}$ இன் வீழலானது $OPRQ$ என்ற இணைகரத்தின் பரப்பை போன்று மும்மடங்காயின் $\angle POQ$ ஆனது	$\tan^{-1}\frac{1}{3}$
35	$\lvert\vec{a} + \vec{b}\rvert = \lvert\vec{a} - \vec{b}\rvert$ எனில்	$\vec{a}$ - ம் $\vec{b}$ - ம் செங்குத்தாகும்

பிரிவு –இ வினா விடைகள்

✪1. ஒரு முக்கோணத்தின் குத்துக்கோடுகள் ஒரே புள்ளியில் சந்திக்கும் என்பதனை வெக்டர் முறையில் நிறுவுக.

தீர்வு: முக்கோணத்தின் உச்சிகள் A, B, C என்க. குத்துக்கோடுகள் AD, BE வரைக. அவைகள் வெட்டும் புள்ளி O என்க. CO வைச் சேர்த்து நீட்ட அது AB யை F இல் சந்திக்கிறது என்க. குத்துக்கோடுகள் ஒரே புள்ளியில் சந்திக்கும் என்பதனை



நிறுவ, $\overrightarrow{CF} \perp \overrightarrow{AB}$ என நிறுவினால் போதும்.

O வைப் பொறுத்து A, B, C களின் நிலை வெக்டர்கள் $\vec{a}, \vec{b}, \vec{c}$ என்க.

$$\overrightarrow{OA} = \vec{a}, \overrightarrow{OB} = \vec{b}, \overrightarrow{OC} = \vec{c}$$

$$AD \perp BC \Rightarrow \overrightarrow{OA} \perp \overrightarrow{BC}$$

$$\text{i.e., } \overrightarrow{OA} \cdot \overrightarrow{BC} = 0$$

$$\overrightarrow{OA} \cdot (\overrightarrow{OC} - \overrightarrow{OB}) = 0$$

$$\vec{a} \cdot (\vec{c} - \vec{b}) = 0$$

$$\boxed{\vec{a} \cdot \vec{c} - \vec{a} \cdot \vec{b} = 0} \quad (1)$$

$$BE \perp CA \Rightarrow \overrightarrow{OB} \perp \overrightarrow{CA}$$

$$\text{i.e., } \overrightarrow{OB} \cdot \overrightarrow{CA} = 0$$

$$\overrightarrow{OB} \cdot (\overrightarrow{OA} - \overrightarrow{OC}) = 0$$

$$\vec{b} \cdot (\vec{a} - \vec{c}) = 0$$

$$\boxed{\vec{b} \cdot \vec{a} - \vec{b} \cdot \vec{c} = 0} \quad (2)$$

(1) மற்றும் (2) யைக் கூட்ட

$$\vec{a} \cdot \vec{c} - \vec{a} \cdot \vec{b} + \vec{b} \cdot \vec{a} - \vec{b} \cdot \vec{c} = 0$$

$$\vec{a} \cdot \vec{c} - \vec{b} \cdot \vec{c} = 0$$

$$(\vec{a} - \vec{b}) \cdot \vec{c} = 0$$

$$(\overrightarrow{OA} - \overrightarrow{OB}) \cdot \overrightarrow{OC} = 0$$

$$\overrightarrow{BA} \cdot \overrightarrow{OC} = 0$$

$$\overrightarrow{BA} \perp \overrightarrow{OC}$$

எனவே மூன்று குத்துக்கோடுகளும் ஒரே புள்ளியில் சந்திக்கும் கோடுகளாகும்.

✪2. $\cos(A - B) = \cos A \cos B + \sin A \sin B$ என்பதனை வெக்டர் முறையில் நிறுவுக.

தீர்வு: O யை மையமாகவும் ஓரலகு ஆரமும் கொண்ட ஒரு வட்டம் வரைக. $\angle XOP = A, \angle XOQ = B$ என்றவாறு அவ்வட்டத்தின் பரிதியில் P, Q என்ற இருபுள்ளிகளை குறிக்க.



$$\therefore \angle POQ = \angle POX - \angle QOX$$

$$= A - B$$

P, Q- ன் ஆயத்தொலைகள் முறையே $(\cos A, \sin A)$ மற்றும் $(\cos B, \sin B)$.

x, y – அச்சுத் திசைகளில் செயல்படும் அலகு வெக்டர்கள் $\vec{i}$ மற்றும் $\vec{j}$ என்க.

$$\overrightarrow{OP} = \cos A\,\vec{i} + \sin A\,\vec{j}, \overrightarrow{OQ} = \cos B\,\vec{i} + \sin B\,\vec{j}$$

புள்ளிப்பெருக்கலின் வரையறைப் படி

$$\overrightarrow{OP} \cdot \overrightarrow{OQ} = |\overrightarrow{OP}||\overrightarrow{OQ}|\cos(A - B)$$

$$= (1)(1)\cos(A - B) = \cos(A - B) \quad (1)$$

புள்ளிப்பெருக்கலின் மதிப்பின் படி

$$\overrightarrow{OP} \cdot \overrightarrow{OQ} = (\cos A\,\vec{i} + \sin A\,\vec{j}) \cdot (\cos B\,\vec{i} + \sin B\,\vec{j})$$

$$= \cos A \cos B + \sin A \sin B \quad (2)$$

(1) மற்றும் (2) லிருந்து

$$\boxed{\cos(A - B) = \cos A \cos B + \sin A \sin B}$$

✪3. $\cos(A+B) = \cos A\ \cos B - \sin A \sin B$ என்பதனை வெக்டர் முறையில் நிறுவுக.

தீர்வு: O யை மையமாகவும் ஓரலகு ஆரமும் கொண்ட ஒரு வட்டம் வரைக. $\angle xOP = A, \angle xOQ = B$ என்றவாறு அவ்வட்டத்தின் பரிதியில் P, Q என்ற இருபுள்ளிகளை குறிக்க.



$\therefore \angle POQ = \angle POx + \angle QOx = A + B$.

P, Q- ன் ஆயத்தொலைகள் முறையே $(\cos A, \sin A)$ மற்றும் $(\cos B, -\sin B)$.$x, y -$ அச்சுத் திசைகளில் செயல்படும் அலகு வெக்டர்கள் $\vec{\imath}$ மற்றும் $\vec{\jmath}$ என்க.

$\overrightarrow{OP} = \cos A\,\vec{\imath} + \sin A\,\vec{\jmath}$, $\overrightarrow{OQ} = \cos B\,\vec{\imath} - \sin B\,\vec{\jmath}$

புள்ளிப்பெருக்கலின் வரையறைப் படி

$$\overrightarrow{OP} \cdot \overrightarrow{OQ} = |\overrightarrow{OP}||\overrightarrow{OQ}| \cos(A+B)$$

$$= (1)(1)\cos(A+B) = \cos(A+B) \quad (1)$$

புள்ளிப்பெருக்கலின் மதிப்பின் படி

$$\overrightarrow{OP} \cdot \overrightarrow{OQ} = (\cos A\,\vec{\imath} + \sin A\,\vec{\jmath}) \cdot (\cos B\,\vec{\imath} - \sin B\,\vec{\jmath})$$

$$= (\cos A)(\cos B) + (\sin A)(-\sin B)$$

$$= \cos A\ \cos B - \sin A \sin B \quad (2)$$

(1) மற்றும் (2) லிருந்து

$$\boxed{\cos(A+B) = \cos A\ \cos B - \sin A \sin B}$$

✪4. $\sin(A-B) = \sin A\ \cos B - \cos A \sin B$ என்பதனை வெக்டர் முறையில் நிறுவுக.

தீர்வு: O யை மையமாகவும் ஓரலகு ஆரமும் கொண்ட ஒரு வட்டம் வரைக.



$\angle XOP = A, \angle XOQ = B$ என்றவாறு அவ்வட்டத்தின் பரிதியில் P, Q என்ற இருபுள்ளிகளை குறிக்க.

$\therefore \angle POQ = \angle POX + \angle QOX = A - B$.

P, Q- ன் ஆயத்தொலைகள் முறையே $(\cos A, \sin A)$ மற்றும் $(\cos B, \sin B)$.$x, y -$ அச்சுத் திசைகளில் செயல்படும் அலகு வெக்டர்கள் $\vec{\imath}$ மற்றும் $\vec{\jmath}$ என்க.

$\overrightarrow{OP} = \cos A\,\vec{\imath} + \sin A\,\vec{\jmath}$, $\overrightarrow{OQ} = \cos B\,\vec{\imath} + \sin B\,\vec{\jmath}$

குறுக்குப்பெருக்கலின் வரையறைப் படி

$$\overrightarrow{OQ} \times \overrightarrow{OP} = |\overrightarrow{OQ}||\overrightarrow{OP}| \sin(A-B)\,\vec{k}$$

$$= (1)(1)\sin(A-B)\,\vec{k} = \sin(A-B)\,\vec{k} \quad (1)$$

குறுக்குப்பெருக்கலின் மதிப்பின் படி

$$\overrightarrow{OQ} \times \overrightarrow{OP} = \begin{vmatrix} \vec{\imath} & \vec{\jmath} & \vec{k} \\ \cos B & \sin B & 0 \\ \cos A & \sin A & 0 \end{vmatrix}$$

$$= \vec{k}(\sin A \cos B - \cos A \sin B) \quad (2)$$

(1) மற்றும் (2) லிருந்து

$$\boxed{\sin(A-B) = \sin A\ \cos B - \cos A \sin B}$$

✪5. $\sin(A+B) = \sin A\ \cos B + \cos A \sin B$ என்பதனை வெக்டர் முறையில் நிறுவுக.

தீர்வு: O யை மையமாகவும் ஓரலகு ஆரமும் கொண்ட ஒரு வட்டம் வரைக. $\angle xOP = A, \angle xOQ = B$ என்றவாறு அவ்வட்டத்தின் பரிதியில் P, Q என்ற இருபுள்ளிகளை குறிக்க.



$\therefore \angle POQ = \angle POx - \angle QOx$
$= A + B$

.P, Q- ன் ஆயத்தொலைகள் முறையே $(\cos A, \sin A)$ மற்றும் $(\cos B, -\sin B)$.

$x, y -$ அச்சுத் திசைகளில் செயல்படும் அலகு வெக்டர்கள் $\vec{\imath}$ மற்றும் $\vec{\jmath}$ என்க.

$\overrightarrow{OP} = \cos A\,\vec{\imath} + \sin A\,\vec{\jmath}$,$\overrightarrow{OQ} = \cos B\,\vec{\imath} - \sin B\,\vec{\jmath}$

குறுக்குப்பெருக்கலின் வரையறைப் படி

$$\overrightarrow{OQ} \times \overrightarrow{OP} = |\overrightarrow{OQ}||\overrightarrow{OP}| \sin(A+B)\,\vec{k}$$

$$= (1)(1)\sin(A+B)\,\vec{k}$$

$$= \sin(A+B)\,\vec{k} \quad (1)$$

குறுக்குப்பெருக்கலின் மதிப்பின் படி

$$\overrightarrow{OQ} \times \overrightarrow{OP} = \begin{vmatrix} \vec{\imath} & \vec{\jmath} & \vec{k} \\ \cos B & -\sin B & 0 \\ \cos A & \sin A & 0 \end{vmatrix}$$

$$= \vec{k}(\sin A \cos B + \cos A \sin B) \quad (2)$$

(1) மற்றும் (2) லிருந்து

$$\boxed{\sin(A+B) = \sin A\ \cos B - \cos A \sin B}$$

✪6. $\vec{a} = 2\vec{\imath} + 3\vec{\jmath} - \vec{k}, \vec{b} = -2\vec{\imath} + 5\vec{k}, \vec{c} = \vec{\jmath} - 3\vec{k}$ எனில் $\vec{a} \times (\vec{b} \times \vec{c}) = (\vec{a} \cdot \vec{c})\vec{b} - (\vec{a} \cdot \vec{b})\vec{c}$ என சரிபார்க்க.

தீர்வு:

$$\vec{b} \times \vec{c} = \begin{vmatrix} \vec{\imath} & \vec{\jmath} & \vec{k} \\ -2 & 0 & 5 \\ 0 & 1 & -3 \end{vmatrix}$$